(இ) மேற்படி முறையீடு கால்நடை பராமரிப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட்டது. 1940-ம் வருடம் இக்கட்டிடம் கட்டப்பட்டதாலும், மேலும் பழுதடைந்துள்ள நிலையிலுள்ளதாலும் மேற்கொண்டு மருத்துவமனை செயல்படச் சாத்தியக்கூறு இல்லை என சிதம்பரம் உதவி செயற் பொறியாளர் சான்று கூறியுள்ளார். ஆகவே, பின்னலூர் கால்நடை மருந்தகம் 1—5—82 முதல் திரு. மருதவாணன் பிள்ளை அவர்களால், வாடகையின்றி வழங்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. பின்னலூரில் கால்நடை மருந்தகம் புதிதாகக் கட்டுவதற்கு செலவின் மதிப்பீட்டை அனுப்புமாறு சிதம்பரம் பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் கோரப்பட்டுள்ளார். அது பெறப்பட்டவுடன் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 9—3—1984 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினா.

Tri Planting Rod Device.

* 80. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a Tri Planting Rod device has been introduced in paddy cultivation in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம். 'ட்ரை பிளேண்டிங் ராடு' எனப்படும் நடவு கோல் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டு, குடுமியான்மலையில் நடைபெற்ற வேளாண்மைத் துறை அலுவலர்களின் கூட்டத்தில் செயல்விளக்கமாகச் செய்து காட்டப்பட்டது. இக்கருவி இன்னும் செயல்விளக்க நிலையிலே உள்ளது.

(இ) தற்பொழுது இக்கருவி தஞ்சை மாவட்டத்தில் தயாரிக்கப்பட்டு, அங்குள்ள விரிவாக்க அலுவலர்களுக்கு செயல்முறையில் விளக்கப்பட்டுள்ளது. உழவர்களிடம், நல்ல வரவேற்பு இக்கருவிக்கு இருப்பின் இக்கருவியை உள்ளூரில் உள்ள உலைகளில் தயாரித்து விநியோகிக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]